# தமிழீழ அரசியல்துறை
## POLITICAL WING OF TAMILEELAM

tat.info.international@gmail.com    +(44) 0734 983 8393


நிர்வாகம் TAT20250420-010T

தமிழீழ அரசியல்துறை

அனைத்து நாடுகள்

20-04-2025

**தமிழ்த் தேசியப் படைப்பாளிகளுக்கான தணிக்கைக் குழுமத்தின் அறிவுறுத்தல்!**

இந்த தமிழ்த் தேசியப் படைப்புக்களுக்கான தணிக்கைக் குழுமத்தில், தமிழீழ அரசியல் துறையால் இனங்காணப்பட்டுத் தேர்ந்தெடுக்கப்பட்ட, திரைப்படத் துறைசார் வல்லுநர்கள் பலர் நிரந்தர உறுப்பினர்களாகவும், தமிழீழ அரசியல் துறையோடு வரையறுக்கப்பட்ட சில வேலை திட்டங்களில் மட்டும் இணைந்து செயற்படும், குறிப்பிட்ட இலக்கிய வல்லுனர்கள், கலைத்துறையின் முக்கிய பிரமுகர்கள், சமூக ஆர்வலர்கள் போன்றோர் தற்காலிக உறுப்பினர்களுமாக இந்தக் குழுமத்தில் இடம் பெறுகின்றனர்.

இந்தக் குழுமம், தமிழர்களாலோ அன்றி வேற்று மொழியாளர்களாலோ படைக்கப்படும், எமது தமிழ் கலை, இலக்கிய, இன வரலாற்றுப் படைப்புகள் மற்றும் தமிழீழ விடுதலைப் போரியல் வரலாற்றுப் படைப்புக்கள், என்பனவற்றைப் பார்வையிட்டு, பகுப்பாய்வு செய்து, அவற்றை வெளியிடலாமா இல்லையா, அல்லது நாம் சுட்டிக் காட்டும் திருத்தங்களை மேற்கொண்ட பின், மீள எமது ஆய்வுக்குட்படுத்திய பின் வெளியிடலாம், போன்ற அறிவுறுத்தல்களூடாக நெறிப்படுத்தி, முறையான தணிக்கைச் சான்றிதழ் வழங்கி வருகின்றது.

இந்தத் தமிழ்த் தேசியப் படைப்புக்களுக்கான தணிக்கை குழுமத்தினரால், மேற்குறிப்பிட்ட படைப்புக்களில் தமிழர்களின் இறையாண்மை, தமிழ்த் தேசியம், தேசியச் சின்னங்களின் பயன்பாடுகள், எமது விடுதலைப் போராட்டம் மற்றும் எமக்காக மரணித்த மாவீரர்களுக்குக் குந்தகம் விளைவிக்கும் கருத்தியல்களோ, எமது பண்பாடு, எமக்கான அரசியல், சட்டம், சமூகநீதி ஆகியவற்றை மீறாத வகையில் உள்ளதா, என்பதைக் கண்காணிப்படுவதுடன் வன்முறை, கொடுமை, ஆபாசம், பாலியல் சார்ந்த அத்துமீறல்கள் போன்றவை, ஆக்கங்களிலும், காட்சியமைப்புக்களிலும் அமைந்துள்ளதா என்று சரிபார்க்கப்படும். மேலும் தனிப்பட்ட அவதூறுகள், இன, சாதி, மத பேத உணர்வுகளைத் தூண்டுதல், சடங்குகளின் பெயரால் நிகழும் தவறுகள் ஆகியன இந்தப் படைப்புக்களில் இடம் பெற்றுள்ளனவா என்று பார்வையிட்டுத் தணிக்கைச் சான்று வழங்கி வைக்கப்படும்.

எமது திரைப்படத் தணிக்கைக் குழுமம், 2009 மே 18 வரை, தமிழீழ நடைமுறை அரசு ஆட்சி அதிகாரத்தில் இருந்த காலப்பகுதியில், உருவாக்கப்பட்டிருந்த நிதர்சனம் நிறுவனத்தின், திரைப்படத் தணிக்கைக் குழுவில் காத்திரமான பங்காற்றியவர்களின் தலைமையில், கலை பண்பாடு, இலக்கியம், வரலாறு, அரசறிவியல், சட்டம் மற்றும் திரைப்படத் துறைசார் வல்லுநர்கள் உட்பட மேலும் பலர் இணைக்கப்பட்டு, இந்தக் குழுமம் வலுவாக்கப்பட்டுள்ளது.

**தமிழீழ அரசியல்துறை**

**POLITICAL WING OF TAMILEELAM**

tat.info.international@gmail.com +(44) 0734 983 8393

இந்தக் குழுமம் ஒவ்வொரு திரைப்படத்தையும் பார்வையிட்டு, திரைப்படங்களுக்கு பொதுமக்கள் அனைவரும் பார்வையிடலாம் என்று கருதும் திரைபடங்களுக்கு **"U" (Unrestricted Public Exhibition or Universal)** எனும் முத்திரையும், வயது வந்தவர்கள் மட்டும் பார்வையிடலாம் எனக் கருதும் திரைப்படங்களுக்கு **"A" (Adult)** எனும் முத்திரையும், வயது வந்தவர்கள் மட்டும் பொதுவாகப் பார்வையிடலாம் என்பதாகக் கருதும் திரைபடங்களுக்கு **"UA" (Unrestricted Public Exhibition with parental or Universal & Adult)** எனும் முத்திரையும், சிறுவர்கள் பார்வையிடலாம் எனும் கருதும் படங்களுக்கு **"C" (Children)** என்றும் முத்திரை வழங்கப்படுகின்றது. தடை செய்யப்பட்ட குறும்படங்கள் மற்றும் திரைப்படங்களுக்கு **"B" (Banned)** முத்திரை வழங்கப்படுகின்றது. இந்த முத்திரை குறிப்பிட்ட திரைப்படத்திற்கு வழங்கப்படும் சான்றிதழ்களின் வலது பக்க மேல் மூலையில் பொறிக்கப்பட்டிருக்கும்.

தமிழீழத் தேசிய தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் எமக்கு வழிகாட்டியதன் அடிப்படையில், ஆரோக்கியமானதோர் தமிழினக் கட்டமைப்பை, வழிநடத்த வேண்டிய கடமையும், பொறுப்பும் எமக்கு உள்ளதால், எமது தணிக்கைக் குழுமத்திற்கு படைப்பாளிகள் மற்றும் இனத்தை நேசிக்கும் ஆர்வலர்கள் அனைவரும், பூரண ஒத்துழைப்பு வழங்கும் பொருட்டு, உங்களால் உருவாக்கப்படும் படைப்புக்கள் அனைத்தையும், எமது பார்வைக்கு உட்படுத்த வேண்டுமென நாம் பேரன்புரிமையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**“தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்”**

| ம.கிருபாகரன் | க.அருளன் | பொறுப்பாளர் |
|---|---|---|
| பணிப்பாளர் | ஒருங்கிணைப்பாளர் | தமிழீழ அரசியல்துறை |
| த.தே.ப.தணிக்கைக் குழுமம் | த.தே.ப.தணிக்கைக் குழுமம் | அனைத்து நாடுகள் |



தமிழீழ அரசியல்துறை – அனைத்து நாடுகள்

தமிழீழ அரசியல்துறை - ஐக்கிய இராச்சியம் | தமிழீழ அரசியல்துறை - கனடா | தமிழீழ அரசியல்துறை - சுவிச்சர்லாந்து | தமிழீழ அரசியல்துறை - பிரான்சு
தமிழீழ அரசியல்துறை - அவுஸ்திரேலியா | தமிழீழ அரசியல்துறை - யேர்மனி | தமிழீழ அரசியல்துறை - நியூசிலாந்து | தமிழீழ அரசியல்துறை - அமெரிக்கா
தமிழீழ அரசியல்துறை - ஸ்கொட்லாந்து | தமிழீழ அரசியல்துறை - நோர்வே | தமிழீழ அரசியல்துறை - டென்மார்க் | தமிழீழ அரசியல்துறை - பின்லாந்து